# நடப்பு நிகழ்வுகள் - மே – (1 – 31), 2021


| வ.எண் | தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 3 |
| 2 | மாநில நிகழ்வுகள் | 7 |
| 3 | தேசிய நிகழ்வுகள் | 9 |
| 4 | திட்டங்கள் | 14 |
| 5 | நீதிமன்ற தீர்ப்புகள் | 15 |
| 6 | சர்வதேச நிகழ்வுகள் | 16 |
| 7 | இந்தியா மற்றும் பிற நாடுகள் | 17 |
| 8 | மாநாடுகள் மற்றும் உச்சிமாநாடுகள் | 18 |
| 9 | பாதுகாப்பு | 19 |
| 10 | பொருளாதாரம் | 20 |
| 11 | நியமனங்கள் | 22 |
| 12 | விருதுகள் | 23 |
| 14 | பிரபலங்கள் | 24 |
| 15 | அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் | 25 |
| 16 | விளையாட்டு | 28 |
| 17 | நினைவில் நின்றவர்கள் | 29 |
| 18 | அறிக்கைகள் | 31 |
| 19 | முக்கிய தினங்கள் | 32 |

APPOLO STUDY CENTRE

# தமிழ்நாடு

- **தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள வேதாந்தாவின் ஸ்டெர்லைட் வளாகத்தில் ஆக்சிஜன் உற்பத்தி ஆலைகள்**
  - ✓ தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள வேதாந்தாவின் ஸ்டெர்லைட் வளாகத்தில் ஆக்சிஜன் ஆலைகளின் ஒட்டுமொத்த செயல்பாட்டையும் கண்காணிப்பதற்காக, தமிழ்நாடு அரசு ஏழு உறுப்பினர்கள் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழுவை அமைத்துள்ளது.
  - ✓ இந்தக் குழு உச்ச நீதிமன்றத்தின் சமீபத்திய ஆணைகளுக்கு இணங்க அமைக்கப்பட்டுள்ளது.

- **மட்டிப்பழம்**
  - ✓ புவிசார் குறியீடு கேட்கும் விண்ணப்பம் கன்னியாகுமரி வாழை மற்றும் தோட்டக்கலை விவசாயிகள் உற்பத்தியாளர் கம்பெனி லிட் என்ற அமைப்பினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
  - ✓ நாகர்கோவில் வாழைப்பழம் பல பண்டைய புத்தகங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- **தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) – தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் முகக் கவசங்கள் போன்ற உயிர் மருத்துவப் பொருட்களை அப்புறப்படுத்துதல்.**

- **தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் முகக் கவசங்கள் போன்ற உயிர் மருத்துவக் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துதல் தொடர்பான புகார்களைப் பதிவு செய்வதற்காக, தமிழ்நாடு அரசு தனியாக ஒரு வலைத்தளத்தையும் அலைபேசி செயலியையும் உருவாக்கி வருகிறது.**
  - ✓ இத்தகைய வசதியை ஏற்படுத்தியுள்ள முதல் மாசு கட்டுப்பாட்டு வாரியமாக நாடு முழுவதிலுமே தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்தான் முதலாவதாக உள்ளது.

- **தமிழ்நாட்டின் எட்டாவது முதலமைச்சர் - மு.க. ஸ்டாலின்**
  - ✓ இவர் தமிழ்நாட்டின் முதல்முறை முதலமைச்சர்களிலேயே மிகவும் வயதானவராக இருப்பார்.

- **திரு. ககன்தீப் சிங் பேடி. இ.ஆ.ப., - பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையராக நியமனம் செய்யப்பட்டார்.**
  - ✓ சென்னையில் பயனற்ற நிலங்கள் அவரது பதவிக்காலத்தில் மியாவாகி காடுகளாக மாறி. சென்னையை 'பசுமைச் சென்னையாக' மாற்றும் முயற்சிக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.
- **'ஆக்சிஜன் பார்லர்கள்'**
  - ✓ பெருநகர சென்னை மாநகராட்சி – சுவாசப் பிரச்சினைகளால் அவதிப்படும் கோவிட் நோயாளிகளுக்கு ஆதரவு அளிப்பதற்காக, 'ஆக்சிஜன் பார்லர்கள்' அமைக்கப்படும் என்று அறிவித்தது.

- **அப்பாவு – தமிழ்நாடு சட்டப் பேரவையின் 18வது சபாநாயகர்**
  - ✓ திரு. எம். அப்பாவு –சென்னையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற தேர்தலில் தமிழ்நாடு சட்ட மன்ற சபாநாயகராக தேர்வு செய்யப்பட்டார்.

- **எம்டிசி – சிசிடிவி-க்களை நிர்மாணிக்க உள்ளது**
  - ✓ மாநகரப் போக்குவரத்துக் கழகம் - நிர்பயா நிதியைக் கொண்டு அனைத்து பேருந்துகளிலும் சிசிடிவி கேமராக்களையும், பீதி பொத்தானையும் நிர்மாணிக்க உள்ளது.

- **அருணா ஜெகதீசன் ஆணையம்- தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு நிகழ்வு**
  - ✓ ஓய்வு பெற்ற நிதியரசர் அருணா ஜெகதீசன் ஆணையம் - மே மாதத்தில் தன்னுடைய இடைக்கால அறிக்கையை முதலமைச்சர் மு.க. ஸ்டாலினிடம் வழங்கியது.

- **பெருநகர சென்னை மாநகராட்சி – 135 மருத்துவ மாணவர்களை பணிக்கு அமர்த்தியது**
  - ✓ சென்னை பெருநகர மாநகராட்சி – சென்னையில் வீட்டுத் தனிமையில் உள்ள கொரோனா நோயாளிகளின் உடல்நிலையைக் கண்காணிப்பதற்காக எம்பிபிஎஸ் பயிலும் 135 இறுதி ஆண்டு மாணவர்களை பணிக்கு அமர்த்தியது.
  - ✓ இத்தகைய பணிக்காக பெருநகர சென்னை மாநகராட்சி 300 மருத்துவர்களையும் பணிக்கு எடுத்துக்கொள்ள உள்ளது.
  - ✓ இவர்கள் ஆம்புலன்ஸ் சேவைக்காக 104 - மாநில போர் அறையில் (State War room - 104) பணிகளை ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

- **'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்'**
  - ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - தன்னுடைய விருப்பார்ந்த திட்டமாகிய பொது மக்களின் குறைகளைத் தீர்க்கும் திட்டத்தை புதிதாக உருவாக்கப்பட்ட 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற துறையின் மூலம் மே மாதத்தில் தொடங்கி வைத்தார்.
  - ✓ 72 மரப் பெட்டிகளில் வைக்கப்பட்ட மற்றும் 275 துணிகளில் கட்டப்பட்ட இந்த மனுக்கள் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' துறையிடம் ஒப்படைக்கப்பட்டன.

- **தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை டிஜிட்டல் மயமாக்கப்படும்.**
  - ✓ தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை (The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments) – தன்னுடைய கட்டுப்பாட்டில் உள்ள 44,000க்கும் மேற்பட்ட கோவில்களின் அசையும் மற்றும் அசையா சொத்துகளின் பட்டியலை அடுத்த 6 மாதங்களுக்குள் டிஜிட்டல்மயமாக்க உள்ளது.

- **கருப்பு பூஞ்சை**
  - ✓ மியூகர்மையோசிஸ் அல்லது கருப்பு பூஞ்சை நோய் - தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டத்தின்கீழ், ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அவர்களால் தமிழ்நாட்டில் ஒரு அறிவிக்கப்பட்ட நோயாக அறிவிக்கப்பட்டது.
- **மே 21, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - ஸ்டெர்லைட்டுக்கு எதிரான வழக்குகளை திரும்பப் பெற்றார்.**
  - ✓ தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டத்தின்போது ஸ்டெர்லைட் எதிர்ப்பாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திரும்பப் பெற்றார்.

- **பெருமாநல்லூரில் நேதாஜி ஆடைப்பூங்கா – 18-44 வயதுக் குழுக்களுக்கான கோவிட் தடுப்பூசி.**
  - ✓ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் - 18 முதல் 44 வயது வரையிலானவர்களுக்கான கோவிட் தடுப்பூசித் திட்டத்தை பின்னலாடை மையமாகிய திருப்பூரில் மே மாதத்தில் தொடங்கி வைத்தார்.

- **தேசிய பசுமைத் தீர்ப்பாயம் - மேகதாது**
  - ✓ காவிரி ஆற்றின் குறுக்கே கர்நாடகாவில் மேகதாது அணைக்கட்டு கட்டுவதில் விதிமீறல்குறித்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ஒரு குழுவை அமைத்துள்ளது.
  - ✓ இந்தக் குழுவில் மைய அரசின் சுற்றுச் சூழல் அமைச்சகத்தின்கீழ் பெங்களூரின் பிராந்திய அலுவலகத்தில் உள்ள மூத்த காவிரி நீர் மேலாண்மை அமைப்பு அலுவலர்கள், காவிரி நீராவரி நிகாம் லிட் (ஒரு கர்நாடக அரசு நிறுவனம்) மற்றும் கர்நாடக வனத்துறை ஆகியோர் இடம் பெற்றிருப்பர்.

- **கோவில் நகரமாகிய காஞ்சிபுரம்**
  - ✓ கோவில் நகரமாகிய காஞ்சிபுரம் - இந்த நகரத்தில் உள்ள 11 புராதன கோவில்கள் யுனெஸ்கோவின் தற்காலிக உலக பாரம்பரியச் சின்னங்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

- **ஓஎன்வி கலாச்சார அகாடமி**
  - ✓ தமிழ் கவிஞரும் பாடலாசிரியருமான வைரமுத்து – மறைந்த மலையாள கவிஞர் ஓஎன்வி குருப் அவர்களின் நினைவாக ஓஎன்வி கலாச்சார அகாடமியால் தோற்றுவிக்கப்பட்டுள்ள ஓஎன்வி விருதை இந்த ஆண்டு பெறுவதற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- **வஉசி (துறைமுகம்), ஐஐடி- சென்னை**
  - ✓ வ.உ.சிதம்பரனார் துறைமுகம் - கப்பல் போக்குவரத்து வளர்ச்சிக்காக, ஐஐடி. சென்னையின், துறைமுகங்கள் நீர்வழிகள் மற்றும் கடற்கரைகளுக்கான தேசிய தொழில்நுட்ப மையம் (National Technology Centre for Ports Waterways and Coasts) உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
  - ✓ இந்த ஒப்பந்தத்தின் நோக்கமானது கப்பல் போக்குவரத்து அமைப்பின் செயல்பாடு, நிர்வகித்தல் மற்றும் பராமரிப்பை உறுதி செய்வதும், வஉசி துறைமுகத்தில் உள்நாட்டு கப்பல் போக்குவரத்து மென்பொருளை உருவாக்குவதுமேயாகும்.
  - ✓ இந்த உள்நாட்டு கப்பல் போக்குவரத்து மென்பொருளை உருவாக்கும் பணி சென்னை, ஐஐடி ஆல் ரூ.27.8 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

- **நிதி கூட்டாட்சி (Fiscal Fedralism)**
  - ✓ தமிழ்நாடு நிதியமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன். 43வது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் தன்னுடைய முதலாவது உரையின்போது, மத்திய அரசு நிதி அதிகாரங்களைப் பகிர்வதன் வாயிலாக வரிசீர்திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் என்றும், நிதி கூட்டாட்சித் தன்மையைப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

- **ஸ்டெர்லைட் காப்பர் - மே மாதத்திலிருந்து, அதனுடைய இரண்டாவது ஆலையிலிருந்து ஆக்சிஜன் உற்பத்தியைத் தொடங்கும்.**

- **மாநில அரசு – கோவிட்-19க்கு தன்னுடைய பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு நிலையான வைப்பு நிதியாக ரூ.5 இலட்சம் வழங்கப்படும் என்று அறிவித்தது.**
  - ✓ மாவட்ட அளவில் அமைக்கப்படும் ஒரு ‘சிறப்புக் குழு’ மூலமாக, இந்தக் குழந்தைகளுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்படுவதையும், அவர்களின் கல்வியையும், மாநில அரசு கண்காணிக்கும்.
  - ✓ இந்த மாணவர்களும் மற்றும் ஒற்றைப் பெற்றோரும் நலத்திட்டங்கில் முன்னுரிமை பெறுவார்கள்.
  - ✓ கோவிட்-19 காரணமாக பெற்றோரை இழந்த குழந்தைகளை அடையாளம் காணும் பணிக்காகவும், அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்காகவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையிலான ஒரு பணிக்குழு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

- **புதிய தேர்தல் ஆணையர்**
  - ✓ தமிழ்நாடு ஆளுநர் பன்வாரிலால் புரோகித் - ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரியாகிய வி. பழனிகுமாரை. மாநில தேர்தல் ஆணையராக நியமித்து ஆணையிட்டுள்ளார்.

- **திரு. வி. இறையன்பு. இ.ஆ.ப – தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளர்.**
  - ✓ தமிழ்நாடு மாநில அரசு - மூத்த அதிகாரியாகிய வி. இறையன்பு அவர்களை தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளராக நியமித்துள்ளது.

- **திரு. ஷங்கர் ஜிவால், ஐபிஎஸ் - சென்னை மாநகர காவல் ஆணையர்.**
    - ✓ புதிதாக நியமிக்கப்பட்ட காவல் ஆணையர் - வேப்பேரியில் மே மாதம் நடைபெற்ற சிறிய அளவிலான நிகழ்ச்சியில் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

- **தமிழகத்தின் - புதிய அட்வகேட் ஜெனரல்**
    - ✓ முன்னாள் மாநிலங்களவை உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமாகிய ஆர். ஷண்முக சுந்தரம் - தமிழ்நாட்டின் புதிய அட்வகேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# மாநிலங்கள்

- **ஹிமந்தா பிஸ்வா சர்மா அஸ்ஸாமின் 15வது முதலமைச்சராக தேர்வு செய்யப்பட்டார்.**

- **கிளைபோசெட் சர்ச்சைக்குரிய களைக் கொல்லி**
  - ✓ கார்சினோ மரபணு கொண்ட கிளைபோசேட், பொதுவாக பருத்திப் பண்ணைகளில் களைகளைக் கொல்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது.
  - ✓ மேலும், எச்டிபிடி (HTBt) பருத்தியை சட்ட விரோதமாக பயிரிடுவதைக் கட்டுப்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

- **ஆயுஷ்-64**
  - ✓ ஆயுஷ்-64 என்பது ஒரு பன்மூலிகை உருவாக்கம் ஆகும். இது ஆயுர்வேதம் மற்றும் யோகாவை அடிப்படையாகக் கொண்ட தேசிய மருத்துவ மேலாண்மை நெறிமுறையால் பரிந்துரைக்கப்பட்டது.
  - ✓ இந்த ஆயுஷ் 64, புது தில்லியில் உள்ள ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சி மையம் (Central Council for Research in Ayurvedic Sciences) ஆல் உருவாக்கப்பட்டது.

- **மகாராஷ்டிரா மிஷன் ஆக்சிஜன் (Maharashtra Mission Oxygen)**
  - ✓ மகாராஷ்டிரா மாநில அரசு – ரூ.200 கோடி ஒதுக்கீட்டில் 'மகாராஷ்டிரா மிஷன் ஆக்சிஜன்' என்ற ஒரு திட்டத்தை சமீபத்தில் வெற்றிகரமாகத் தொடங்கி வைத்துள்ளது.

- **கருப்பு பூஞ்சை நோய் - மியூகோமைகோர்சிஸ்**
  - ✓ கருப்பு பூஞ்சை நோய் - அரியானாவால் ஒரு அறிவிக்கப்பட்ட நோயாக அறிவிக்கப்பட்டது.

- **சஞ்சீவனி பரியோஜனா (Sanjeevani Pariyojana)**
  - ✓ அரியானா – கோவிட் -19க்கு எதிராக 24 மே 2021 அன்று சஞ்சீவனி பரியோஜனா என்ற ஒரு ஆயுள் திட்டத்தைத் தொடங்கி வைத்தது.

- **உலக பாரம்பரிய அடையாளம்**
  - ✓ மகாராஷ்டிரா அரசு – மாநிலத்தில் உள்ள 14 கோட்டைகளுக்கு உலக பாரம்பரிய அடையாள அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளது.
  - ✓ யுனெஸ்கோ அமைப்பு தன்னுடைய உலக பாரம்பரியச் சின்னத்திற்கான தற்காலிக பட்டியலில் இந்த விண்ணப்பங்களைச் சேர்த்துள்ளது.
  - ✓ அந்தப் பதினான்கு கோட்டைகள் - ஷிவனேரி கோட்டை, ராய்காட் கோட்டை, டோர்னா கோட்டை, ராஜ்காட் கோட்டை, லோகாத், முர்ஹெர் கோட்டை, ரங்கனா கோட்டை, அங்காய் டங்காய் கோட்டைகள், காசா கோட்டை, சிந்துதுர்க் கோட்டை, அலிபாக் கோட்டை, சுவர்ணதர்க் மற்றும் கந்தேரி கோட்டை.

- **ஆயுஷ் கர்-துவார் (Ayush Ghar-Dwar)**
  - ✓ குடும்பங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள கோவிட்-19 நேர்மறை நோயாளிகளுக்கு உதவுவதற்காக இமாசல அரசு 'ஆயுஷ் கர்-துவார்' என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளது.

- **மணிப்பூர் ஆர்கானிக் மிஷன் ஏஜென்சி (Manipur Organic Mission Agency)**
  - ✓ மணிப்பூர் முதலமைச்சர் என். பைரென்சிங், 'மணிப்பூர் ஆர்கானிக் மிஷன் ஏஜென்சி மார்க்கெட்' என்ற ஒரு ஸ்மார்ட்போன் செயலியைத் தொடங்கி வைத்தார்.

- **அம்ரித் வாகினி செயலி (Amrit Vahini)**

- ✓ மருத்துவமனை படுக்கைகளை ஆன்லைனிலேயே பதிவு செய்வதற்காக 'அம்ரித் வாகினி' என்ற ஒரு செயலியை ஜார்க்காண்ட் அரசு தொடங்கி வைத்துள்ளது.

## ➢ ஹிட் கோவிட் செயலி (HIT)

- ✓ பீகார் மாநில அரசு 'ஹிட்' என்ற ஒரு கோவிட் செயலியைத் தொடங்கி வைத்துள்ளது.

## ➢ 'ஆக்சிஜன் ஆன் வீல்ஸ் (Oxygen on Wheels)

- ✓ அரியானாவின் கர்ணால் நிர்வாகம், கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் ஆக்சிஜன் பிரச்சினையை எதிர்கொள்வதற்காக மருத்துவமனைகளுக்கு உதவுவதற்காக, 'ஆக்சிஜன் ஆன் வீல்ஸ்' என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளது.

## ➢ நைட்ரஜன் உற்பத்தி ஆலைகளை ஆக்சிஜன் உற்பத்தி ஆலைகளாக மாற்றுதல்

- ✓ இந்திய தொழில்நுட்பக் கழகம், பாம்பே - இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் காணப்படும் நைட்ரஜன் உற்பத்தி ஆலைகளை. அந்த நைட்ரஜன் உற்பத்தி ஆலைகளின் அமைப்பில் சிறு முன்னேற்றத்தைச் செய்து, ஆக்சிஜன் உற்பத்தி ஆலைகளாக மாற்றுவதற்காக ஒரு செயல்விளக்க அலகை அமைத்துள்ளது.

## ➢ சாரோபாட் டைனோசர்கள் (Sauropod dinosaurs)

- ✓ மேகாலயாவில், 100 மில்லியன் ஆண்டுகளுக்கும் முன்பு வாழ்ந்த சாரோபாட் டைனோசர்களின் புதை எலும்புத் துண்டுகளை இந்திய புவியியல் ஆய்வு அமைப்பின் (Geological Survey of India) ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

## ➢ மே.ஃ.பிளவர் 400 (Mayflower 400)

- ✓ 'மே.ஃ.பிளவர்' என்று பெயரிடப்பட்ட உலகின் முதலாவது ஆளில்லாத கப்பல் அட்லாண்டிக் பெருங்கடலைக் கடக்க உள்ளது.

## ➢ லைவ் வையர் (Live Wire)

- ✓ ஹார்லி-டேவிட்சன் இங்க். நிறுவனம் 'லைவ் வயர்' என்ற பெயரில் ஒரு புதிய முற்றிலும் மின்சாரமயமாக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் பிராண்டைத் தொடங்கி வைக்க உள்ளது.

# தேசிய செய்திகள்

- **18-44 வயதினருக்கான தேசிய அளவிலான கோவிட் தடுப்பூசிப் பணி – மே மாதத்தில் ஆறு மாநிலங்களில் மட்டும் தொடங்கப்பட உள்ளது.**

- **2021ஆம் ஆண்டில் இதுவரை இல்லாத அளவாக உணவு தானிய உற்பத்தி இலக்கு 307 மில்லியன் டன்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

- **ரஷ்ய கோவிட்-19 தடுப்பூசி - ஸ்புட்னிக் வி (sputnik V)**

- **இந்திய இராணுவம் - இந்திய இராணுவப் படையில் உள்ள வீரர்களின் பயன்பாட்டிற்காக முதலாவது பசுமை சூரிய சக்தி பயன்பாட்டு ஆலை ஒன்றை சமீபத்தில் சிக்கிம் மாநிலத்தில் அமைத்துள்ளது.**

- **ஆபரேஷன் சமுத்ர சேது (Operation Samudra Setu) II**
  - ✓ பல்வேறு நாடுகளில் இருந்து திரவ ஆக்சிஜன் நிரப்பப்பட்ட கிரையோஜெனிக் கலன்களை இந்தியாவிற்கு எடுத்து வருவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
  - ✓ ஐஎன்எஸ் தல்வார் கப்பலானது 40 மில்லியன் டன் ஆக்சிஜனை பஹ்ரைனில் உள்ள மணாமாவிலிருந்து மும்பைக்கு எடுத்து வரும்.
  - ✓ ஐஎனஎஸ் கோல்கட்டா தோஹா சென்று, மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக் கொண்டு, அங்கிருந்து குவைத் சென்று திரவ ஆக்சிஜன் டேங்குகளைப் பெற்று வரும்.

- **ஐதராபாத்தின் நேரு விலங்கியல் பூங்காவில் உள்ள எட்டு ஆசிய சிங்கங்களுக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளது**
  - ✓ மனிதர்களிடமிருந்து சிங்கங்களுக்குப் பரவி அவற்றைப் பாதிக்கும் முதலாவதாகக் கண்டறியப்பட்ட நிகழ்வு இதுவாகும்.
  - ✓ ஆசியாவிலேயே உள்ள மிகப்பெரிய விலங்கியல் பூங்காக்களில் ஒன்றாகிய நேரு விலங்கியல் பூங்கா, ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பார்வையாளர்களுக்கான அனுமதியை ரத்து செய்தது.

- **ஒற்றை ஷாட் ரஷ்ய கோவிட்-19 தடுப்பூசி**
  - ✓ டாக்டர் ரெட்டிஸ் லேப்ஸ் என்ற அமைப்பு ஸ்புட்னிக் வி என்ற தடுப்பூசி விநியோகிக்கும் ஒப்பந்தத்தை ர ஷ்ய நேரடி முதலீட்டு நிதியத்துடன் (Russian Direct Investment Fund) ஏற்கனவே மேற்கொண்டுள்ளது.
  - ✓ தடுப்பூசி பற்றாக் குறையால் பாதிக்கப்பட்டுள்ள இந்தியாவின் தடுப்பூசி நடவடிக்கைகளுக்கு ஒற்றை ஷாட் ரஷ்ய ஸ்புட்னிக் தடுப்பூசியானது ஒரு மிகப்பெரிய ஊக்கமளிக்கும் வருகையாக அமைந்துள்ளது.
  - ✓ ஒப்பீட்டு அடிப்படையில், இரண்டு டோஸ் ஸ்புட்னிக் தடுப்பூசியானது 92 விழுக்காடு செயல் திறனைப் பெற்றிருக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது.
  - ✓ ஒற்றை ஷாட் டோஸ் ஆனது இரண்டு டோஸ் தடுப்பூசி - Ad26 இன் முதலாவது அடினோவைரல் வெக்டார் கூறைக் கொண்டிருக்கும்.

- **கோ-வின் (Co – Win)**
  - ✓ சுகாதார அமைச்சகம் - கோ-வின் மென்பொருளுடன் நான்கு இலக்க பாதுகாப்புக் குறியீடு என்ற புதிய அம்சத்தை சேர்க்க உள்ளதாக சமீபத்தில் அறிவித்தது.
  - ✓ கோ-வின் (**Co-WIN**) என்பது கோவிட்-19 தடுப்பூசி புலனாய்வு வலையமைப்பு (**Vaccine Intelligence Network**) என்பதைக் குறிக்கும்

➢ **பிரதமரின் கிசான் திட்டம் மே மாதத்தில் தொடங்கி வைக்கப்பட உள்ளது.**

- ✓ பிரதமர் நரேந்திர மோடி, பிரதமரின் கிசான் சம்மான் நிதி (Pradhan Mantri Kisan Samman Nidhi) திட்டத்தின்கீழ், 9.5 கோடிக்கும் மேலான விவசாயிகளுக்கு எட்டாவது தவணைத் தொகையாகிய ரூ.20,667 கோடியை காணொலி காட்சி வாயிலாக விடுவித்துள்ளார்.
- ✓ விவசாயிகளின் பயிர் சாகுபடி செலவினங்களுக்காகவும், அவர்களின் கடனைக் குறைப்பதற்காகவும், நேரடி வருவாய் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் முதலாவது தவணைத் தொகையாகிய ரூ.2,000, 2018ஆம் ஆண்டு உத்தரப் பிரதேசத்தில் உள்ள கோரக்பூரிலிருந்து தொடங்கி வைக்கப்பட்டது.
- ✓ முதலாவது தவணைத் தொகையாகிய ரூ.2,000 வழக்கமாக ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களுக்கு இடையிலும், இரண்டாவது தவணைத் தொகை ஆகஸ்ட் மற்றும் நவம்பர் மாதங்களுக்கு இடையிலும் செலுத்தப்படுகிறது.

➢ **புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சந்தை பார்வை 2021 (Renewable Energy market outlook 2021)**

- ✓ சர்வதேச எரிசக்தி முகமை (The International Energy Agency) – அதனுடைய 2021ஆம் ஆண்டுக்கான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சந்தை பார்வை அறிக்கையை சமர்ப்பித்தது.
- ✓ இந்தியா, கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு மூன்று மடங்கு அதிக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றல் திறனைக் கூட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் 2022ஆம் ஆண்டில் புதிய இலக்கை எட்டும்.
- ✓ 30 ஏப்ரல் முடிய, இந்தியாவில் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள சூரிய சக்தி உற்பத்தித் திறன் 40.5 ஜிகாவாட்டுகள் ஆகும். தற்போது நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் திறன் 36.48 ஜிகாவாட்டுகள் ஆகும்.

➢ **கோவிஷீல்டு தடுப்பூசிக்கு இடையிலான காலத்தை 12-16 வாரங்கள் அதிகரித்தல்**

- ✓ மத்திய அரசு – அரசு நிர்ணயித்த குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில், கோவிஷீல்டு தடுப்பூசியின் இரண்டு டோஸ்களுக்கு இடையே தற்போது உள்ள 6-8 வார இடைவெளியை 12-16 வாரங்களாக அதிகரிக்க அனுமதி அளித்துள்ளது.
- ✓ டாக்டர்.என்.கே. அரோரா தலைமையிலான கோவிட் பணிக் குழு, கோவிஷீல்டு தடுப்பூசியின் இரண்டு டோஸ்களுக்கு இடையிலான இடைவெளியை 12-16 வாரங்களாக அதிகரிக்கப் பரிந்துரைத்துள்ளது.

➢ **உச்ச நீதிமன்றத்தின் இ-கமிட்டி போர்ட்டல்**

- ✓ உச்ச நீதிமன்றத்தின் இ-கமிட்டி (e-Committee) போர்ட்டலானது, தற்போது இந்தி, ஒடியா, தமிழ், மராத்தி மற்றும் காஷி உள்ளிட்ட பிராந்திய மொழிகளிலும் அணுகக் கிடைக்கிறது.

➢ **மேம்பட்ட வேதியியல் செல் (Advanced Chemistry Cell) – ஆத்மநிர்பார் வழியாக**

- ✓ மத்திய அமைச்சரவை – மே மாதத்தில் ரூ.18,100 கோடி ஒதுக்கீட்டில் மேம்பட்ட வேதியியல் செல் பேட்டரி சேமிப்பு அமைப்புக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை திட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளது.
- ✓ இந்தியா தற்போது ரூ.20,000 கோடி மதிப்பிலான மின்கல சேமிப்பு உபகரணங்களை இறக்குமதி செய்து வருகிறது. இந்தத் திட்டமானது இந்தியாவை சுய-சார்பு உடையதாக ஆக்குவதற்கு உதவி செய்யும் (ஆத்மநிர்பர்) என்பதோடு இறக்குமதியையும் குறைக்க உதவும்.
- ✓ மேம்பட்ட வேதியியல் செல் பேட்டரி சேமிப்பிற்கான தேசிய திட்டம் உருமாறும் இயக்கம் பற்றிய தேசிய திட்டத்தால் (National Mission on Transformative Mobility and Battery Storage) முன்மொழியப்பட்டது. இது 2019ஆம் ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்டது.

- **டாக்டே சூறாவளி (Tauktae Cyclone)**
  - ✓ டாக்டே சூறாவளியானது, அரபிக் கடலில் தோன்றிய முதலாவது சூறாவளிப் புயல் ஆகும்.
  - ✓ இந்தச் சூறாவளி மே 17 அன்று பின்பகுதியில் ஒரு மிகக் கடுமையான சூறாவளியாக (**very severe cyclone**) டையூ யூனியன் பிரதேசத்திற்கு அருகில் இறங்கி, குஜராத் கடற்கரைப் பகுதியில் மிகப்பெரிய பேரழிவை ஏற்படுத்தியது.
  - ✓ 'டாக்டே' என்ற பெயரை மியான்மார் கொடுத்தது, அதன் பொருள் 'கெக்கோ' (**gecko**) ஆகும். இது பர்மிய மொழியில் அதிக குரலெழுப்பும் பல்லி என்பதாகும்.

- **ஆக்சிஜன் பூங்கா (Oxygen park)**
  - ✓ மே 2021ல், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், கோயம்புத்தூரில் உள்ள அதனுடைய வளாகத்தில் பெரிய மூங்கில்களைக் கொண்டு (**Beema Bamboo**) ஆக்சிஜன் பூங்காக்களை வடிவமைத்தது.
  - ✓ பாம்புசாபால்கூவாவின் (Bambusabalcooa) ஒரு குளோன் ஆகிய பீமா மூங்கில், அதிக உயிர்ப்பொருளை விளைவிக்கும் ஒரு மூங்கில் சிற்றினமாகும்.

- **கோவிஷீல்டு தடுப்பூசி போடும் நாள் கணக்கு மாற்றியமைப்பு**
  - ✓ மத்திய அரசு – கோவி ஷீல்டு தடுப்பூசி போடும் கால இடைவெளி 12-16 வாரங்கள் என்ற புதிய அட்டவணைக்கு ஏற்ப கோ-வின் தளத்தில் மாற்றங்களைச் செய்துள்ளது.

- **உர மானியம்**
  - ✓ மத்திய அரசு - இந்த ஆண்டிற்கான உர மானியத்திற்கான ஒதுக்கீட்டை ரூ.14,775 கோடி அளவுக்கு உயர்த்த முடிவு செய்துள்ளது.
  - ✓ சமீபத்தில் பிரதமரின் கிசான் திட்டத்தின்கீழ், எட்டாவது தவணைத் தொகையாக ரூ.20,667 கோடியை விவசாயிகளின் கணக்கிற்கு மாற்றிய பின்னர், விவசாயிகளின் நலனுக்காக இந்த அரசு செய்த இரண்டாவது மிகப்பெரிய நடவடிக்கை இது ஆகும்.

- **முதலாவது விவசாய ஏற்றுமதி வசதி மையம் பூனாவில் அமைக்கப்பட்டுள்ளது.**
  - ✓ மராத்தா சேம்பர் ஆப் காமர்ஸ் தொழில்கள் மற்றும் வேளாண்மை (Mahratta Chamber of Commerce Industries and Agriculture) மற்றும் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (National Bank for Agriculture and Rural Development) – நாட்டின் முதலாவது வேளாண்மை ஏற்றுமதி வசதி மையத்தை மே மாதத்தில் பூனாவில் தொடங்கி வைத்தன.

- **மியூகர்மைகோசிஸ் (Mucormycosis)**
  - ✓ மைய அரசு – 'மியூகர்மைகோசிஸ்' நோயை தொற்று நோய்கள் சட்டம், 1897ன்படி, ஒரு அறிவிக்கப்பட்ட நோயாக அறிவிக்க வேண்டும் என்று அனைத்து மாநிலங்களையும் யூனியன் பிரதேசங்களையும் கேட்டுக் கொண்டுள்ளது.
  - ✓ கருப்பு பூஞ்சை என்றும் அழைக்கப்படும் இந்த மியூகர்மைகோசிஸ் நோயைக் குணப்படுத்துவதற்குப் பயன்படும் 'ஆம்ஃபோடெரிசின் பி' என்ற உயிர் காக்கும் பூஞ்சை எதிர்ப்பு ஊசி மருந்தைத் தயாரிப்பதற்கு ஐந்து புதிய நிறுவனங்களுக்கு இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி வழங்கியுள்ளது.

- **டாக்சி ஆம்புலன்ஸ் (Taxi Ambulance)**
  - ✓ கோவிட் 19 பெருந்தொற்றின்போது தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்ட டாக்சி ஆம்புலன்ஸ் சேவையானது, மைய அரசு அடையாளம் கண்டுள்ளபடி, தமிழ்நாடு அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட 14 சிறந்த நடைமுறைகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது.

- **ஆக்சிஜன் விரைவு இரயில் (Oxygen Express)**
  - ✓ இந்திய இரயில்வேயின் முதலாவது ஆக்சிஜன் விரைவு இரயில், இரண்டு பெண் ஓட்டுநர்களால் இயக்கப்பட்டு, 120 டன்கள் மருத்துவ ஆக்சிஜனைச் சுமந்து கொண்டு, ஜாம்ஷெட்பூரிலிருந்து மே மாதத்தில் பெங்களூரு வந்தடைந்தது.

- **யுனெஸ்கோ – உலக பாரம்பரியச் சின்னங்கள் 48 ஆக அதிகரிப்பு**
  - ✓ அவை கங்கைத் தொடரில் உள்ள வாரணாசி, தமிழ்நாட்டின் காஞ்சிபுரத்தில் உள்ள கோவில்கள், மத்தியப் பிரதேசத்தில் உள்ள சத்பூரா புலிகள் சரணாலம், மகாராஷ்டிராவில் உள்ள மராத்தா இராணுவ கட்டிடக்கலை, கர்நாடகாவில் உள்ள ஹைர்பெனக்கல் மெகாலித்திக் தளம் மற்றும் மத்தியப் பிரதேசத்தின் நர்மதா பள்ளத்தாக்கில் உள்ள பெடகாட் லமேதகாட் ஆகும்.
  - ✓ இவற்றையும் சேர்த்து, யுனெஸ்கோ உலக பாரம்பரிய இடங்கள் பட்டியலில் உள்ள உத்தேச இடங்களின் எண்ணிக்கை 48 ஆக அதிகரித்துள்ளது.
  - ✓ ஹைர்பெனக்கல் மெகாலித்திக் தளத்தில் 400க்கும் மேற்பட்ட மெகாலித்திக் கால இறுதிச் சடங்கு நினைவுப் பொருட்கள் கிடைத்துள்ளன.
  - ✓ நர்மதா பள்ளத்தாக்கில் உள்ள பெடகாட்-லேம்டகாட் ஆகியவை இந்தியாவின் பெரிய பள்ளத்தாக்குகள் என்று குறிப்பிடப்படுகின்றன.
  - ✓ அநேக டைனோசார் புதைபடிவ எரிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, அந்த இடத்தில் நர்மதை ஆற்றின் பக்கத்தில் பெரும் அளவிலான பளிங்குப் பாறைகள் காணப்படுகின்றன.

- **யாஸ் - பஹானா பிளாக்குக்கு அருகில் நிலச்சரிவை ஏற்படுத்தியது**
  - ✓ டாக்டே யாஸ் புயலுக்கு அடுத்ததாக இந்தியாவைத் தாக்கிய இரண்டாவது பெரிய புயல் யாஸ் ஆகும். இதற்கு ஓமன் நாடு பெர்சியன் மொழியில் பெயரிட்டுள்ளது. இதன் பொருள் மல்லிகை போன்று நல்ல நறுமனம் கொண்ட மரம் என்பதாகும்.
  - ✓ டாக்டே என்பது, ஒரு பர்மியப் பெயர் ஆகும். இதன் பொருள் 'கெக்கோ' என்ற ஒரு அதிக குரலெழுப்பும் ஒரு பல்லி ஆகும்.

- **பிஎம் - கேர்ஸ் - குழந்தைகளுக்காக**
  - ✓ மத்திய அரசு – கோவிட் 19 பெருந்தொற்றால் பெற்றோரை இழந்த குழந்தைகளை ஆதரிப்பதற்காக இதர பல சலுகைகளுடன், ரூ.10 இலட்சம் நிதியுதவி, இலவச கல்வி ஆகியவற்றையும் குழந்தைகளுக்கான 'பிஎம் கேர்ஸ்' திட்டத்தின்கீழ் அளித்துள்ளது.
  - ✓ மத்திய அரசு, 'பிஎம் கேர்ஸ் ஃபார் சில்ட்ரன்' என்ற திட்டத்தை அறிவித்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், பிஎம் கேர்ஸ் நிதியத்திலிருந்து, அத்தகைய குழந்தைகளின் பெயரில் நிரந்தர வைப்புக் கணக்கு தொடங்கப்படும்.
  - ✓ இதன்மூலம் ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைக்கும் மொத்த கார்ப்பஸ் நிதி ரூ.10 இலட்சம் ஆக இருக்கும்.

- **மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் - பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் அடிப்படையிலான பயோ டீசல் கலந்த டீசலின் முதல் விநியோகத்தைக் காணொலி காட்சி வாயிலாக கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.**
  - ✓ இந்தத் திட்டமானது பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெயை சேகரித்து பயோ டீசலாக சேமிப்பதற்கான ஒரு சுற்றுச் சூழல் அமைப்பை உருவாக்குவதையும், இதன்மூலம் தொழில் முனைவோருக்கான வாய்ப்புகளை உருவாக்குவதையுமே முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.
  - ✓ இந்த நடைமுறையில், பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெயிலிருந்து பெறப்படும் 7 விழுக்காடு பயோடீசல், டீசலுடன் கலக்கப்படும்.
  - ✓ உத்தரப் பிரதேசம், குஜராத் மற்றும் மத்தியப் பிரதேச மாநிலங்களில் எட்டு பயோ டீசல் ஆலைகளைக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை இந்தியன் ஆயில் நிறுவனம் ஏற்கனவே தொடங்கி விட்டது.
  - ✓ பயோடீசல் என்பது வழக்கமான அல்லது தொல்பொருள் டீசலைப் போலவே உள்ள ஒரு மாற்று எரிபொருள் ஆகும். இது விரைவிலேயே மக்கும் தன்மை கொண்டது மற்றும் முற்றிலும் நச்சுத்தன்மை இல்லாதது.

- **சிபிஐ இயக்குநரைத் தேர்வு செய்வதற்கான உயர் மட்டக் குழு - இந்த ஆண்டின் பிப்ரவரி மாதம் முதல் காலியாக உள்ள இந்த உயரிய பதவிக்கு மூன்று ஐபிஎஸ் அலுவலர்களைத் தேர்வு செய்து வைத்துள்ளது.**
  - ✓ இந்தப் பட்டியலில் பரிசீலனையில் உள்ள மூன்று பெயர்கள் மகாராஷ்டிராவின் முன்னாள் காவல்துறைத் தலைவர் சுகோத் கமார் ஜெய்ஸ்வால், சஷாஷ்திரா சீமா பாலின் (Sashastra Seema Bal) தலைமை இயக்குநராகிய குமார் ராஜேஷ் சந்திரா, மற்றும் உள்துறை அமைச்சகத்தின் சிறப்புச் செயலாளர் வி.எஸ்.கே. கௌமுடி ஆவர்.
  - ✓ இந்தக் குழுவில் பிரதமர் நரேந்திர மோடி, உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி என்.வி. ரமணா, எதிர்கட்சியின் சார்பில், மக்களவை காங்கிரஸ் கட்சியின் தலைவர் அதிர் ரஞ்சன் சௌத்ரி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.
  - ✓ விவாதத்தின்போது. உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ரமணா, ஆறு மாதங்களுக்குக் குறைவாக பணி அனுபவம் உள்ள ஒரு காவல் அதிகாரியை, பரிசீலிக்கக்கூடாது என்று ஒரு குறிப்பிட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைச் சுட்டிக் காட்டி வலியுறுத்தினார்.
  - ✓ வெளிப்படையாக சொல்வதானால், ஒரு புதிய சிபிஐ இயக்குநரைத் தேர்வு செய்வதற்கான நிகழ்வின்போது, இப்போதுதான் இத்தகைய ஒரு விதி முதல் முறையாக சுட்டிக் காட்டப்படுகிறது.

# திட்டங்கள்

- **கிசான் சம்மான் நிதி (Kisan Samman Nidhi)**
  - ✓ பிரதமர் நரேந்திர மோடி சமீபத்தில், பிரதமரின் கிசான் சம்மான் நிதியின் எட்டாவது தவணைத் தொகையை வெளியிட்டார்.
  - ✓ இந்திய அரசு ரூ.6,000ஐ சிறு மற்றும் குறு விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்துகிறது. இந்தத் தொகையானது மூன்று தவணைகளாக மாற்றப்படுகிறது. முதல் தவணைத் தொகையான ரூ.2,000 ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களுக்கு இடையில் செலுத்தப்பட்டது.

- **தேசிய சுகாதார அதிகார அமைப்பு (National Health Authority), தெலுங்கானா முழுவதும், ஆயுஷ்மான் பாரத் பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தெலுங்கானா அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.**

- **இந்திய பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் மேம்பாட்டுக் கூட்டமைப்பு (Tribal Cooperative Marketing Development Federation of India)**
  - ✓ மத்திய பழங்குடியினர் நலத்துறையானது. நிதி ஆயோக் அடையாளம் கண்டுள்ள 39 விருப்பார்ந்த பழங்குடியினர் மாவட்டங்களில் வன் தன் யோஜனா திட்டத்தின்கீழ், வன் தன் விகாஸ் கேந்திரா (**Van DhanVikas Kendra**) முனைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நித்தி ஆயோக் அமைப்புடன் இணைந்து செயல்பட உள்ளது.
  - ✓ இதில் அடங்கியுள்ள மாவட்டங்கள் ஆந்திரப் பிரதேசம், அஸ்ஸாம், சத்தீஸ்கர், குஜராத், ஜார்க்காண்ட், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, ஒடிசா, தெலுங்கானா மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்களில் உள்ளன.

APPOLO STUDY CENTRE

# நீதிமன்றத் தீர்ப்புகள்

- **தமிழ் வழியில் கற்ற நபர்கள் (PSTM) – ஒதுக்கீடு**
  - ✓ சென்னை உயர்நிதி மன்றம் - முதல் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை எல்லா நிலைகளிலும் தமிழ் வழியில் கல்வி கற்றவர்கள் மட்டுமே தமிழ் வழியில் கற்ற நபர்களுக்கான ஒதுக்கீட்டின் கீழ், 20 விழுக்காடு வேலைவாய்ப்பினைப் பெறுவதற்குத் தகுதி பெறுவார்கள் என்று தெரிவித்துள்ளது.
  - ✓ நீதியரசர்கள் என் கிருபாகரன் மற்றும் பி. புகழேந்தி ஆகியோர் அடங்கிய ஒரு டிவிஷன் பெஞ்ச் இந்தத் தீர்ப்பை வழங்கியது.
  - ✓ இந்தச் சட்டத்தின் பிரிவு 2(டி)ன்கீழ், 'தமிழ் வழியில் கற்ற நபர்கள்' என்ற சொல், தங்களது அனைத்து கல்வியையும் தமிழ் வழியில் பயின்றவர்களை மட்டுமே குறிக்கும்.

- **உச்ச நீதிமன்றம் - தன்னுடைய 1992ஆம் ஆண்டு தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய மறுத்துவிட்டது, அந்தத் தீர்ப்பில் இட ஒதுக்கீட்டில் 50 விழுக்காடு என்ற உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**
  - ✓ இட ஒதுக்கீட்டில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வரம்பை நீக்கி, அதற்கும் மேல் இட ஒதுக்கீடு வழங்க தங்களை அனுமதிக்குமாறு பல்வேறு மாநிலங்கள் முன்வைத்த கோரிக்கைகளை உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது.
  - ✓ ஐந்து நீதிபதிகள் அடங்கிய ஒரு அரசியல் சாசன அமர்வு, இந்திரா சாஹ்னி வழக்கில் உச்ச நிதிமன்றம் வழங்கிய தீர்ப்பு காலத்தைக் கடந்த நிலைத்து இருப்பதாக தெரிவித்தது.
  - ✓ இந்த அமர்வில் நீதியரசர்கள் அசோக் பூஷன், எல். நாகேஷ்வரராவ், எஸ். அப்துல் நாசர், ஹேமந்த் குப்தா மற்றும் எஸ். ரவிந்திர பட் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

- **உச்ச நீதிமன்றம் பெரும்பான்மை தீர்ப்பின் அடிப்படையில், குடியரசுத் தலைவர் மட்டுமே (அதாவது மைய அரசு) இட ஒதுக்கீடு வழங்குவதற்காக சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய சமூகங்கள் குறித்த முடிவை எடுக்க முடியும் என்று அறிவித்தது.**

- **உச்ச நீதிமன்றம் -** சமீபத்தில் கோவிட் 19 நேர்வுகள் அதிகரித்த போது, மைய அரசின் ஒதுக்கீட்டு முறையில் குறைபாடுகள் இருந்ததாகக் கூறி, மாநிலங்களுக்கு ஆக்சிஜனை விநியோகிப்பதற்காக, 12 உறுப்பினர்கள் கொண்ட தேசிய அளவிலான ஒரு பணிக்குழுவை அமைத்தது.
  - ✓ நீதியரசர்கள் டி.ஒய். சந்திரசூட் மற்றும் எம்.ஆர். ஷா ஆகியோரைக் கொண்ட ஒரு அமர்வு மத்திய கேபினட் செயலாளரை இந்தக் குழுவின் ஒருங்கிணைப்பாளராக இருக்கும்படி பணித்தது.

- **உச்ச நீதிமன்றம் -** பெருநிறுவனங்கள் தாங்கள் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறினால், அந்தக் கடன்களுக்கு உத்தரவாதம் அளித்த தனிநபர்களே அந்தக் கடன்களுக்குப் பொறுப்பாவார்கள் என்றும். கடன் வழங்கியவர்கள் அவர்களிடம் இருந்து பாக்கியை வசூலிக்கலாம் என்றும் தெரிவித்தது.

# சர்வதேச செய்திகள்

- **உலக சுகாதார அமைப்பு – ‘மாடர்னா’வின் எம்ஆர்என்ஏ தடுப்பூசியை அவசர கால பயன்பாட்டிற்கு என சமீபத்தில் பட்டியலிட்டுள்ளது.**
    - ✓ மாடர்னாவின் கோவிட்-19 தடுப்பூசி அமெரிக்கா, கனடா, ஸ்விட்சர்லாந்து, சிங்கப்பூர், கத்தார், தைவான் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
    - ✓ எம்ஆர்என்ஏ (mRNA)-1273 என்பது மாடர்னா தடுப்பூசியின் தொழில்நுட்பப் பெயர் ஆகும்.
    - ✓ ஐரோப்பிய மருந்துகள் அமைப்பு, ஐரோப்பிய ஒன்றியம் முழுவதிலும் இந்த மருந்தை சந்தைப் படுத்துவதற்கான அனுமதியை ஜனவரி 2021ல் வழங்கியது.

- **கே.பி. ஷர்மா ஒளி – பிரதமராக மீண்டும் பணியமர்த்தப்பட்டார்.**
    - ✓ கே.பி. ஷர்மா ஒளி – புதிய அரசில் எதிர் கட்சிகளுக்கு போதிய இருக்கைகள் கிடைக்காததால், கே.பி. ஷர்மா ஒளி, மீண்டும் நேபாள பிரதமராக நியமிக்கப்பட்டார்.

- **பொலிவியா – கோவிட் தடுப்பூசி பயணங்கள் டிரிப்ஸ்**
    - ✓ பொலிவியா – 15 மில்லியன் டோஸ்கள் கோவிட்-19 தடுப்பூசியை இறக்குமதி செய்வதற்காக டிரிப்ஸ் (TRIPS) ஒப்பந்தத்தில் நெகிழ்வுத் தன்மையைக் கோரிய முதல் நாடு ஆகியுள்ளது.

- **A-76**
    - ✓ சமீபத்திய செயற்கைக் கோள் படங்களின்படி, A-76 என்று பெயரிடப்பட்ட உலகின் மிகப்பெரிய பனிப்பாறை உடைந்து கொண்டிருக்கிறது.

- **உலக சுகாதார அமைப்பு – சோடியம் உள்ளடக்கத்தை மட்டுப்படுத்துவதற்காக புதிய வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கியுள்ளது.**
    - ✓ உணவு மற்றும் பானங்களில் அதிகப்படியாக சேர்க்கப்படும் உப்பு, மக்களுக்கு உயிரிழப்பை ஏற்படுத்தக் கூடிய இதய நோய்கள் மற்றும் மாரடைப்பு ஏற்படக்கூடிய அபாயத்தை ஏற்படுத்துகின்றன என்று குறிப்பிட்டுள்ளது.
    - ✓ உலக சுகாதார அமைப்பின் கருத்துப்படி, ஒவ்வொரு ஆண்டும் உலக அளவில் நேரிடும் உயிரிழப்புகளில் 11 மில்லியன் உயிரிழப்புகள் மோசமான உணவுப் பொருட்களால் நேரிடுகின்றன, அதிக அளவு சோடியம் எடுத்துக் கொண்டதால் ஏற்படும் 3 மில்லியன் இறப்புகளும் இதில் அடங்கும்.
    - ✓ சோடியம் குளோரைடு என்பது உப்புக்கான வேதியியல் பெயர் ஆகும். இந்த சோடியம் என்ற தாதுப் பொருளே நமது உடலில் தண்ணீரின் அளவைக் முறைப்படுத்துகிறது.

- **சீனாவின் மிகப்பெரிய ராக்கெட்டான லாங் மார்ச் 5பி (Long March 5B)இன் எச்சங்கள் இந்தியப் பெருங்கடலில் தரையிறங்கின.**

# இந்தியாவும் இதர நாடுகளும்

- **இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்காக ரோட் மேப் (Roadmap) 2030**
  - ✓ 'ரோட் மேப் 2030', இங்கிலாந்து மற்றும் இந்தியாவுக்கு இடையே சுகாதாரம், காலநிலை, வர்த்தகம், கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு போன்ற துறைகளில் இருதரப்பு உறவுகளை ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்கிறது.
  - ✓ ஆக்ஸ்.ஃ.போர்டு – அஸ்ட்ரா ஜனேகா-எஸ்ஐஐ (Oxford-AstraZaneca-SII) இணைப்பின் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட தடுப்பூசி கூட்டு ஒப்பந்தம் இந்த உச்சி மாநாட்டின் போது சிறப்பாக விவாதிக்கப்பட்டது.
  - ✓ இந்த இருதரப்பு உச்சி மாநாடு, இந்தியா - இங்கிலாந்து இடையே 2030 வாக்கில் இரண்டு மடங்குக்கும் அதிகமாக அளவு இலக்கை அடைவது என்று நிர்ணயித்துள்ளது.

- **வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் - மே மாதத்தில் நான்கு நாட்கள் பயணமாக லண்டன் செல்கிறார்.**
  - ✓ அவர் ஜி7 செல்வ நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்களின் கூட்டத்தில் பங்கேற்பதற்காக இங்கிலாந்து செல்கிறார்.
  - ✓ இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக ஒரு விருந்தினராக இந்தியாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

- **இங்கிலாந்து மற்றும் இந்திய அரசுகள் - தங்களது முதலாவது மேம்பட்ட தொழில் கூட்டாண்மையை மே மாதத்தில் அறிவிக்க உள்ளன**
  - ✓ இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகிய இருவருக்குமிடையே மெய்நிகராக நடைபெற்ற கூட்டத்திற்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையானது இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையேயான தடையில்லா வர்த்தக ஒப்பந்தத்திற்கான முதலாவது படி என்று கருதப்படுகிறது.
  - ✓ ஒரு பில்லியன் பவுண்டுகள் (ரூ.10,000 கோடி) நிதி ஒதுக்கீட்டில், இங்கிலாந்து - இந்தியா நாடுகளுக்கு இடையேயான ஒரு புதிய வர்த்தகம் மற்றும் முதலீடு அறிவிக்கப்பட உள்ளது. இதில் இங்கிலாந்தில் இந்திய ஊநீர் மருந்துகள் நிறுவனம் முதலீடு செய்ய உள்ள 240 மில்லியன் பவுண்டுகளும் (ரூ.2400 கோடி) அடங்கும்.

- **இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் - 2+2 என்ற விதத்திலான அமைச்சர்கள் நிலையிலான கூட்டத்தை நடத்துவதற்கு சமீபத்தில் ஒத்துக் கொண்டனர்.**

- **இந்தியா மற்றும் இஸ்ரேல் - 2023ஆம் ஆண்டு வரையில் மூன்று ஆண்டுகளுக்கு வேளாண்மைத் துறையில் கூட்டுறவை மேம்படுத்துவதற்காக ஒரு கூட்டுப் பணி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.**

# மாநாடுகள் மற்றும் உச்சி மாநாடுகள்

- **பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்ட, முதலாவது இந்தியா – ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களின் கூட்டம், மே மாதத்தில் நடைபெற்றது.**
  - ✓ இந்தக் கூட்டம், இந்த இரண்டு தரப்புகளுக்கும் இடையில் பெரிய அளவில் வர்த்தக ஒப்பந்தங்களை அதிகரிக்க உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கூட்டம் 2013 முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, பேச்சு வார்த்தையை மீண்டும் தொடர்வது என்று முடிவு செய்தது.
  - ✓ மேலும், இந்த இரண்டு தரப்புகளும் ஒரு சமமான மற்றும் விரிவான, சுதந்திரமான வர்த்தகம் மற்றும் முதலீடுகளை மேற்கொள்வது என ஒப்புக் கொண்டன.
  - ✓ பிரதமர் நரேந்திர மோடி, தடுப்பூசி மருந்துகள் உற்பத்தி தொடர்பான காப்புரிமைகளுக்கு TRIPன் தள்ளுபடியை வழங்குமாறு ஆதரவு கோரினார்.

APPOLO STUDY CENTRE

